**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**

**<u>SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC-207/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | தீபா | Prosecution | LW- 1 as PW -1 |
| Fathers Name | இளையராஜா | Defence | |
| Village | புதுப்பட்டினம். | Taluk | |
| Calling | | Age | 42/2025 |

**Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day**

**<u>26.06.2025. எதிரிகள் ஆஜர்</u>**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். நான் எனது கணவர் மற்றும் எனது இரு மகள்களுடன் வசித்து வருகிறேன். எனது முதலாவது மகளின் பெயர் தீப்தி அவருக்கு 17 வயது ஆகின்றது. இரண்டாவது மகள் இனியா அவருக்கு 9 வயது ஆகின்றது. கடந்த 16.06.2024 ஆம் தேதி மதியம் 3 மணியளவில் நான் வீட்டின் உள்ளே வேலை செய்து கொண்டிருந்தேன். எனது இரண்டாவது மகள் இனியா எனது வீட்டு வாசலில் விளையாடிக் கொண்டிருந்தார். 1வது எதிரி சங்கர் என்பவரின் மகன் வேலவன்( வயது 13) எனது மகள் இனியாவை அசிங்கமாக திட்டி, முகுகில் அடித்து கீழே தள்ளிவிட்டார்.

எனது மகளின் அழுகை குரலை கேட்டு நான் சென்று பார்த்து வேலவன் என்பவரிடம் ஏன் எனது மகளை அடித்தாய் என்று நா'ன கேட்டேன். அதற்கு வேலவன் என்னையும் குச்சிக்காரி தேவடியா என்று திட்டினார். நான் அவரை அவ்வாறு எல்லாம் பேசக்கூடாது என்று மிரட்டி வேலவனை அவரது வீட்டிற்கு அனுப்பிவிட்டேன். பின்னர் அன்றைய தினமே மாலை 5 மணியளவில்
நான் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த போது வேலவனின் வீட்டில் இருந்து சங்கர், பானுமதி, சுதாகர், அறிவழகி, மீனா மற்றும் சிலர் சண்டை போடுவதற்காக எங்கள் வீட்டிற்கு வந்தபோது சத்தம் கேட்டு எனது தாயர் என்னை வீட்டிற்குள் வைத்து

கதவை பூட்டிவிட்டார். நானும் எனது மகள்களும் உள்தாப்பால் போட்டுக்கொண்டு வீட்டிற்குள் இருந்தோம். ஆஜர் எதிரி சாங்கர் என்பவர் தனது காலால் வீட்டின் உதைத்து உடைத்து உள்ளே வந்து என்னை கீழே தள்ளி பானுமதி என்பவர் எனது வயிற்றின் மேலே ஏறி உக்கார்ந்து விட்டார். சங்கர் காலால் என்னை எட்டி உதைத்தார். பானுமதி என்னை மார்பிலும், வியிற்றிலும் தாக்கினார். சுதாகர் என்பவரும் என்னை வயிற்றில் உதைத்தார். எனது தெருவைச் சேர்ந்தவர்கள் சத்தம் கேட்டு வந்து சண்டையை விளக்கி அவர்களை வெளியே அனுப்பினார்கள். எதிரிகள் அடித்ததில் எனக்கு அதிக அளவில் இர்த்தப்போக்கு ஏற்பட்டதால் நாங்கள் உடனடியாக அங்கிருந்து பாலாஜி மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டபின் வீட்டிற்கு சென்றுவிட்டோம். மேற்படி இரத்தப்போக்கு நிற்காததால் சீர்காழி அரசு மருத்துவமனைக்கு சென்று 8 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். சிகிச்சையில் இருந்த போது புதுப்பட்டினம் போலிசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றுக் கொண்டார்கள். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் ஆ.சா.அ. 1 ஆக குறியிடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிதரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**

**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC-207/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | பானுமதி | Prosecution | LW-2 as PW -2 |
| Husband Name | ராமசாமி | Defence | |
| Village | புதுப்பட்டினம் | Taluk | |
| Calling | | Age | 65/2025 |

**Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day**

**26.06.2025. எதிரிகள் ஆஜர்**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகள் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்களை சண்டை நடந்த போது நான் பார்த்தேன். எனது வீட்டிலிருந்து 3 வீடு தள்ளிதான் எனது மகள் தீபா வீடு உள்ளது. கடந்த 1 வருடத்திற்கு முன்னாள் ஒரு நாள் 3 மணிக்குமேல் நான் எனது வீட்டில் இருந்த போது சண்டை சத்தம் கேட்டு நான் வெளியே சென்று போய் பார்த்தபோது எனது மகள் வீட்டில் தான் கூட்டமாக எதிரிகள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். 3 வது எதிரி சுதாகர் எனது மகள் வீட்டின் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே செல்வதை நான் பார்த்தேன். ஒரு விருந்திற்காக எதிரி சங்கர் உறவினர்கள் அவர் வீட்டிற்கு வந்திருந்ததாள் அவர்கள் அனைவரும் சேர்ந்து வந்து எனது மகள் வீட்டில் சண்டையிட்டு கொண்டிருந்தபோது எதிரி சங்கர் மற்றும் அவரது மனைவி கீழே கிடந்த எனது மகளை தாக்கிக்கொண்டிருந்தார்கள். அதில் சங்கர் எனது மகளை காலால் எட்டி உதைத்தார். கீழே விழுந்த எனது மகளுக்கு உதிரம் ஏற்ப்பட்டதால் நான் எனது மகள் மீது விழுந்து எதிரிகளை அடிக்காதீர்கள் என்று கும்பிட்டு கேட்டுக்கொண்டேன். அதன்பின் சிகிச்சைக்காக எனது மகளை எங்கள் ஊரில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அதன்பின் உதிரம் நிற்காத

காரணத்தினால் எனது மகளை சீர்காழி அரசு மருத்துவமனையில் அனுமதிக்க அங்கு அவர் உள்நோயாளியாக 15 நாட்களுக்குமேல் சிகிச்சையில் இருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிதரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**

**<u>SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC-207/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | இளையராஜா | Prosecution | LW-4 as PW -3 |
| Husband Name | காசிநாதன் | Defence | |
| Village | புதுப்பட்டினம் | Taluk | |
| Calling | | Age | 48 /2025 |

**Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day**

**<u>26.06.2025. எதிரிகள் ஆஜர்</u>**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி அ.சா.2 எனது மாமியார் ஆவார்கள். கடந்த 16.06.2024 ஆம் தேதி நான் எனது உறவினரை பார்ப்பதற்காக மயிலாடுதுறைக்கு சென்றிருந்தேன். அப்போது எதிரி சங்கர் எனக்கு தொலைபேசி மூலம் போன் செய்து எனது மனைவி சண்டையிடுவதாக கூறியிருந்தார். அதனைத் தொடர்ந்து இது சம்பந்தமாக எனது மனைவியிடம் நா்ன தொடர்பு கொண்டு கேட்டபோது சங்கரின் மகன் எங்களது மகளை அடித்ததாக எனது மனைவி தெரிவித்தார். சுமார் 5 மணியளவில் நான் எனது வீட்டிற்கு சென்றேன். அப்போது எதிரி சங்கர், சங்கரின் மனைவி, சுதாகர் மற்றும் சங்கரின் உறவினர்கள் சிலர் எங்கள் வீட்டின் முன்பு நின்று எனது மனைவியை குச்சிக்காரி தேவடிய என்று தகாத வார்த்தைகளால் திட்டிக்கொண்டு எங்கள் வீட்டு கதவை உடைத்துக்கொண்டிருந்தார்கள். நான் சென்று அவர்களை தடுத்தேன் அவர்கள் என்னை தள்ளிவிட்டார்கள். ஆஜர் எதிரிகள் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே சென்று எனது மனைவியை கடுமையாக தாக்கினார்கள். அதில் சங்கரின் மனைவி எனது மனைவியில் வயற்றில் உக்கார்ந்து அவரை நெஞ்சில் தாக்கினார். கூட்டத்தை விளக்கி உள்ளே சென்று எனது மனைவியை அழைத்துக்கொண்டு தனியார் மருத்துவமனைக்கு சென்றேன்.

வீட்டிற்கு வந்து ஒரு நாள் கழித்து எனது மனைவிக்கு ரத்தப்போக்கு நிற்காத காரணத்தினால் அவரை மீண்டும் சீர்காழி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிதரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**